# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தச்) சட்டம்*

---

*(2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 3 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2015, மாச்சு மாதம் 06 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *11.00***　　　　**தபாற் செலவு : ரூபா *20.00***

**2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தச்) சட்டம்**

[*2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ–8/2015*

**2006 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் 34 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"உடல்நலம் பற்றிய எச்சரிக்கைகளின்றியும் மற்றும் தார் மற்றும் நிக்கோட்டீன் உள்ளீடு பற்றிய கூற்று அல்லது சுட்டுத் துண்டில்லாமலும், புகையிலை உற்பத்திப் பொருட்களின் விற்பனை,*

34. (1) புகையிலை உற்பத்திப் பொருளொன்றின் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் ஒருவர் –

(அ) அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது இறக்குமதியாளரினால் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை உற்பத்திப்பொருளைக் கொண்டுள்ள ஒவ்வொரு சிப்பத்தினதும், பொதியினதும் அல்லது அட்டைப் பெட்டியினதும் முற்புற, பிற்புறப் பக்கங்கள் ஆகிய இரண்டினதும் மேற்பரப்பிடத்தில் 34அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமை

2-PL 008770 - 925 (2015/02)

இறக்குமதி முதலியன தடை செய்யப்படுதல்.

வாக, விதித்துரைக்கப்படக்கூடியவாறான உடல்நல எச்சரிக்கைகளையும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது இறக்குமதியாளரினால் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை உற்பத்திப் பொருளைக் கொண்டுள்ள ஒவ்வொரு சிப்பத்திலும், பொதியிலும் அல்லது அட்டைப்பெட்டியிலும், அத்தகைய சிப்பத்தில், பொதியில் அல்லது அட்டைப்பெட்டியில் அடங்கியுள்ள தார் மற்றும் நிக்கோட்டீன் உள்ளீட்டைக் குறித்துரைக்கின்ற ஒரு சுட்டுத் துண்டையும் அல்லது கூற்றையும்,

துலாம்பரமாகவும் மற்றும் எளிதில் வாசிக்கத் தக்கவாறு அச்சிடப்பட்டதாகவும் வெளிக்காட்டி வைக்கச் செய்தல் வேண்டும்.

(2) ஆளொருவர், புகையிலை உற்பத்திப் பொருட்களைக் கொண்டுள்ள ஒரு சிப்பத்தை, பொதியை அல்லது அட்டைப்பெட்டியை, (1)(அ) என்னும் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான உடல்நல எச்சரிக்கையொன்றும் (1) (ஆ) என்னும் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான ஒரு சுட்டுத்துண்டும் அல்லது ஒரு கூற்றும், புகையிலை உற்பத்திப்பொருட்களைக் கொண்டுள்ள ஒவ்வொரு சிப்பத்திலும், பொதியிலும் அல்லது அட்டைப்பெட்டியிலும் துலாம்பரமாகவும் எளிதில் வாசிக்கத்தக்கவாறு அச்சிடப்பட்டதாகவும் வெளிக்காட்டி வைக்கப்பட்டாலொழிய, விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முனைதலோ, வழங்குதலோ, விநியோகித்தலோ அல்லது களஞ்சியப்படுத்துதலோ ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன்,

நீதிவான் ஒருவரினால் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஐம்ப தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாத லும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 34அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச்சட்டவாக்கத்தின் 34அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"உடல் நல எச்சரிக்கைகளை எவ்வாறு வெளிக்காட்டி வைத்தல் வேண்டும் என்பது.*

34அ. (1) சிகரெட்டுக்களினதும் ஏனைய புகையிலை உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்தி யாளர் அல்லது இறக்குமதியாளர் ஒருவர், சிகரெட்டுக்களையும் ஏனைய புகையிலை உற்பத் திப் பொருட்களைக் கொண்டுள்ள ஒவ்வொரு சிப்பத்தினதும், பொதியினதும் அல்லது அட்டைப் பெட்டியினதும் முற்புற மற்றும் பிற்புறப் பக்கங்கள் ஆகிய இரண்டிலும் மேற்பரப்பிடத்தின் (பிரதான வெளிக்காட்டுகையிடம்) எண்பது சதவீத இடத்தை மேவி, 34 (1) ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உடல் நல எச்சரிக்கை அச்சிடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) மேற்போந்த உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப் பட்ட உடல்நல எச்சரிக்கைகள், சிகரெட்டுக்களை யும் ஏனைய புகையிலை உற்பத்திப்பொருட்களை யும் பயன்படுத்துவதன் மூலம் விளைவிக்கப்படும் உடல் நல ஆபத்துக்களையும் மற்றும் தீங்கான விளைவுகளையும் விதித்துரைக்கப்பட்ட முறையில் சுட்டிக் காட்டுதல் வேண்டும்.

(3) சிப்பத்தின், பொதியின் அல்லது அட்டைப் பெட்டியின் முற்புற, பிற்புறப்பக்கங்களின் மீதான உடல் நல எச்சரிக்கை ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுதல் வேண்டும்.

(4) உற்பத்தியாளரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களிலான சிகரெட்டுகளையும் ஏனைய புகையிலை உற்பத்திப்பொருட்களையும் உற்பத்தி செய்யுமிடத்து, உற்பத்தியாளர் அத்தகைய உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்பட்ட வெவ்வேறான பலதரப்பட்ட இனங்கள் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான உடல் நல எச்சரிக்கையைக் கொண்டிருக்காதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(5) சிகரெட்டுக்களினதும் ஏனைய புகையிலை உற்பத்திப்பொருட்களினதும் சிப்பங்கள், பொதிகள் அல்லது அட்டைப்பெட்டிகள்மீது வெளிக்காட்டப்பட்ட உடல் நல எச்சரிக்கைகள், விதித்துரைக்கப்பட்ட வகுதிகளான உடல் நல எச்சரிக்கைகளின் கீழான எல்லா விதித்துரைக்கப்பட்ட உடல் நல எச்சரிக்கைகளும் மேவப்படும் வகையில், ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கொரு தடவை மாற்றப்படுதல் வேண்டும்.

(6) சிகரெட்டுகளினதும் ஏனைய புகையிலை உற்பத்திப்பொருட்களினதும் உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும், அதிகாரசபையினால் மட்டுமே வழங்கப்பட வேண்டிய, விதித்துரைக்கப்பட்ட உடல் நல எச்சரிக்கைகளைக் கொண்டுள்ள நெருக்குறுத்த இறுவட்டைப் பயன்படுத்துதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, "தவிசாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது :-

"உடல் நல எச்சரிக்கைகள்" என்பது படங்களை அல்லது உருவ விளக்கப்படங்களை மற்றும் செய்திகளை உள்ளடக்கும் ;".

**5**. புகையிலை உற்பத்திப்பொருட்களின் ஏலவேயுள்ள கையிருப்புக்களின் உற்பத்தியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் 34அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு 2015, யூன் 1 ஆந் தேதி வரையிலான அவகாசக் காலப்பகுதியொன்று வழங்கப்படுதல் வேண்டும். *நிலைபெயர்கால ஏற்பாடுகள்.*

**6**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 30 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து நடைமுறையில் தொடர்ந்தும் இருத்தல் வேண்டும். *பேணல்கள்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*